සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## இஸ்லாம் - ඉස්ලාම්

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) வேதமும் ஸுஹுபுகளும் வழங்கப்பட்ட நபி
   1) ஈஸா (அலை) 2) மூஸா (அலை)
   3) ஆதம் (அலை) 4) இப்ராஹிம் (அலை)

2) ஸூரா அல் கத்ர் அல்குர்ஆனின் எத்தனையாவது அத்தியாயம்
   1) 90 2) 95 3) 97 4) 105

3) நெருப்பினால் படைக்கப்பட்ட இறைவனின் படைப்பினம்,
   1) மலக்குகள் 2) விலங்குகள் 3) மனிதர்கள் 4) ஜின்கள்

4) ஸபூர் வேதம் வழங்கப்பட்ட நபி,
   1) ஈஸா (அலை) 2) மூஸா (அலை) 3) தாவூத் (அலை) 4) முஹம்மத் (ஸல்)

5) 'லைல்"என்பது
   1) பகல் 2) இரவு 3) காலை 4) மதியம்

6) அல்குர்ஆனின் முதலாவது அருளப்பட்ட அத்தியாயம்,
   1) ஸூரா அல்கத்ர் 2) ஸூரா அலக் 3) ஸூரா அஸ்ர் 4) ஸூரா பகரா

7) ஈமானின் ஐந்தாவது அம்சம்,
   1) மறுமையை விசுவாசிப்பது 2) கழாகத்ரை விசுவாசிப்பது
   3) மலக்குகளை விசுவாசிப்பது 4) றஸூல்மார்களை விசுவாசிப்பது

8) ஸுன்னா என்ற கருத்தில் பயன்படுத்தப்படும் இன்னொரு சொல்,
   1) அமல் 2) ஸலாத் 3) ஹதீஸ் 4) வஹி

9) தூதுத்துவம் என்பதைக் குறிக்கும் அரபுச் சொல்,
   1) மஆத் 2) தவ்ஹீத் 3) தவக்குல் 4) ரிஸாலத்

10) அல்லாஹ்வின் வாஜிபான ஸிபத்துக்களிலொன்று
   1) இல்முன் 2) அதமுன் 3) அஸம்மு 4) ஜஹ்லுன்

11) மலக்குகளின் தலைவர்,
   1) மாலிக் (அலை) 2) ஜிப்ரில் (அலை) 3) ரகீப் (அலை) 4) அதீத் (அலை)

12) சாதாரண நஜீஸுக்குள் அடங்காதது,
   1) மலம் 2) சிறுநீர் 3) நாயின் உமிழ்நீர் 4) வாந்தி

13) உடம்பின் ஏதாவது உறுப்புக்களில் காயம் ஏற்பட போடப்படும் கட்டு,
1) இபாதத் 2) ஜபீரத் 3) இமாரத் 4) தஹாரத்

14) தயமம் செய்யப் பயன்படுத்தப்படும் பொருள்
1) மரத்தூள் 2) மண் 3) தண்ணீர் 4) வெந்நீர்

15) தௌஹீத் எனும் பதத்தின் எதிர்ப்பதம்,
1)குப்ர் 2) நிபாக் 3) ஷிர்க் 4) ரித்தத்

16) தௌஹீத் என்பது,
1) தூதுத்துவம் 2) ஏகத்துவம் 3) மறுமை 4) நம்பிக்கை

17) ஈமானின் வகைகள்
1) 2 2) 3 3) 4 4) 5

18) அல்லாஹ்வின் பண்புகளை எத்தனையாக பிரித்து நோக்கலாம்
1) 2 2) 4 3) 3 4) 5

19) இஸ்லாத்தின் நான்காவது கடமை
1) ஹஜ் 2) கலிமா 3) நோன்பு 4) ஸக்காத்

20) புர்க்கான் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1) இஸ்லாம் 2) குர்ஆன்
3) கலிமா 4) மஆத்

- **பின்வரும் கூற்றுகள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

21) வெட்கமின்மை நரகத்துக்கு இட்டுச்செல்லும் என்பது நபியவர்களின் வாக்காகும். (.......)

22) அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாகும். (.......)

23) வாழ்வின் சிலதுறைகளுக்கு மாத்திரமே அல்குர்ஆன் வழிகாட்டுகிறது. (.......)

24) தீயநட்பு இழிவைத்தரும் (.......)

25) ஈமானின் இரண்டாவது அம்சம் வேதங்களை விசுவாசிப்பதாகும். (.......)

♦ **பொருத்தமானசொற்களைவைத்து, இடைவெளிநிரப்புக.**

(புர்கான், ஹிராக்குகை,தொழுகை,அல்லாஹ்,லைலத்துல் கத்ர்)

26) அல்குர்ஆன் அருளப்பட்ட இரவு................................ ஆகும்.

27) அரபுமொழியில் அருளப்பட்டவேதம் .................................. ஆகும்.

28) நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறங்கிய இடம் ............. ஆகும்.

29) மறுமையில் முதன் முதலில் விசாரிக்கப்படும் அமல் ................................ ஆகும்.

30) வணக்கத்திற்குத் தகுதியானவன் ................................மாத்திரமே.

(60 புள்ளிகள்)

## பகுதி II

- **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. 1) ஸுன்னாஎன்றால் என்ன?
   2) வஹியின் இரு வகைகளையும் எழுதுக. (5+5=10 புள்ளிகள்)

2. 1) மலக்குகள் நால்வரின் பெயர்களை எழுதி, அவர்களின் பொறுப்புக்களைத் தருக.
   2) மலக்குகளின் பண்புகள் இரண்டைத் தருக. (5+5=10 புள்ளிகள்)

3. 1) நஜீஸ் எத்தனை வகைப்படும். அவற்றை எழுதுக.
   2) அவற்றிற்கு உதாரணம் தருக. (5+5=10 புள்ளிகள்)

4. 1) ஸுஹுபுகள் என்றால் என்ன?
   2) ஸுஹுபுகள் வழங்கப்பட்ட நபிமார்களின் பெயர்களைஎழுதுக. (5+5=10 புள்ளிகள்)

5. 1) அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதங்களையும் அவை அருளப்பட்ட நபிமார்களையும் எழுதுக.
   2)அல்குர்ஆன் பற்றி சிறு குறிப்பெழுதுக. (5+5=10 புள்ளிகள்)

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.